**உன் வாழ்க்கையில் மிகப்பெரிய ஒன்றைச் சாதிக்க உன்னிலிருந்து உன்னைத் தூண்டுபவர் இயேசுவே.**

வடகிழக்கு இந்தியா, மியாவ் என்ற ஊரில் ஆயர் ஜோர்ஜ் பல்லிப்பரம்பில் என்பவர் தூதுரைப்பணி செய்த செய்தி கத்தோலிக் செய்தி புத்தகத்தில் நவம்பர் 7,2018 இதழில் வெளிவந்தது. அவருடைய மறைமாவட்டத்தில் நடைபெறும் அனைத்தும் கடவுளே திட்டமிட்டது; அவர் அதை செவிமடுத்து, மறுமொழி கொடுப்பது மட்டுமே அவருடைய வேலை. அவருடைய மறைமாவட்டத்தில் திருமுழுக்குப் பெற்ற கத்தோலிக்கர்கள் எண்ணிக்கை 1979 இல் 900 ஆக இருந்தது, இப்போது 90,000 ஆக உயர்ந்துள்ளது. உள்ளூர் மக்கள் தொகை 20 விழுக்காடு அதிகரித்துள்ளது. இதற்கு முன் இவர்கள் ஆன்மீக வாதிகளாக இருந்தார்கள். இந்த மக்கள் நற்செய்திக்காக தாகத்தோடு காத்துக்கொண்டிருந்தது தான் மிக முக்கியமான காரணம் என்பதை ஆயர் அறிந்து கொண்டார். இந்த முயற்சி அவர்களுக்கு மிகப்பெரிய அளவில் விடுதலையை மட்டுமல்ல; இதற்கு முன்பு இவர்கள் அறிந்திராத மதிப்பையும் கொடுத்தது.

இந்த மாற்றம்/உருமாற்றம் இவர்களுக்கு எவ்வாறு நிகழ்ந்தது?

ஆயரின் சாட்சிமிகு நற்செய்தியை இந்த வார்த்தைகளில் இருந்து எடுத்துக்கொண்டார்; " நம்முடைய அடிப்படை இலக்கு: அவர்களுக்கு உதவுவது- என்னென்ன தேவையோ-அனைத்தும். கல்வி, மருத்துவம் எதுவாக இருந்தாலும். இந்த வேலைகளை நாங்கள் செய்தோம்; அவர்கள் எங்களை அறிந்துகொண்டார்கள். அவர்களோடு நாங்கள் வாழ்ந்தோம்; தங்கினோம்; எங்களின் சாட்சியங்களைக் கண்டார்கள்; இலவசமாக அன்பைத் தரும்போது அதன் கனியாக அவர்கள் நற்செய்தியை ஏற்றுக்கொண்டார்கள். (இந்தக் கட்டுரையை முழுவதுமாக வாசிக்க:http://bit.ly/2zu6ijc)

இந்த நிகழ்வு இன்றைய நற்செய்தியில் உருமாற்ற நிகழ்வைக் காட்டுகிறது. இயேசு தம்முடைய நெருக்கமான சீடர்களிடம் தாம் உருமாறிய தோற்றத்தைக் காட்டுகிறார். நாமும் உருமாற்றம் அடைய வேண்டுமென்று ஒரு அழைப்பு விடுக்கவே இதை நமக்கும் வெளிப்படுத்துகின்றார். நம்முடைய தாய் நாடான விண்ணகத்திற்குச் சென்று இறைவனோடு ஒன்றாக இணைவதே நம்முடைய இறுதிபயணம் என்பதை நாம் உணரவேண்டும்.

மியாவ் ஆயரை நாமும் பின்பற்றி, நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் இயேசுவை பிறர் செவிமடுப்பது மட்டுமல்ல, நற்செய்திக்கு சாட்சி பகரும் தூதுரைப்பணியின் சீடர்களாக மாறவேண்டும் என மன்றாடுவோம்.

"அந்த மேகத்தினின்று, "இவரே, என் மைந்தர்; நான் தேர்ந்துகொண்டவர் இவரே. இவருக்குச் செவிசாயுங்கள் என்று ஒரு குரல் ஒலித்தது. †

**இன்றைய விவிலிய குறிப்பு:**

தொடக்க நூல்: 15: 5-12.17-18; திபா: 27: 1,7-9,13-14

பிலிப்பியர்: 3:17-4:1;

லூக்கா: 9: 28-36

**வாரம் ஒரு வசனம்**

**நமக்கு விண்ணகமே தாய்நாடு.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 11/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

17 மார்ச் 2019

# Newbec

NEW WAY OF BEING CHURCH **தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு**

திருமுழுக்குப் பெற்று அனுப்பபடுதல்



மாதாந்திர கருப்பொருள்:

**சிலுவையை சுமக்க எங்களுக்குப் பலம் தாரும்**

# ஆற்றல் வாய்ந்த சாட்சிகளாக மாற மாற்றமடைதல்

தவக்காலத்தின் இரண்டாம் வாரத்தில் பயணத்தைத் தொடர்ந்திருக்கும் நாம், திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய (பிலிப்:3:17-4:1) கடிதத்தில் கூறுவது போல் இறைவார்த்தையில் வாழ முயற்சிக்க அறிவுறுத்துகிறார். மேலும், நமக்கு விண்ணகமே தாய்நாடு; அங்கிருந்துதான் ஆண்டவர் இயேசு வருவாரெனக் காத்திருக்கிறோம். அவர் தமது ஆற்றலால், தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிக்குரிய தமது உடலின் சாயலாக உருமாற்ற வல்லவர் என்று உறுதியாகக் கூறுகிறார்

Image: ©123rf.com




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ


# *2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
# திருமுழுக்கு அளித்து அனுப்புதல்
## *2019 மார்ச்சு (பங்குனி) மாதத்தின் கருப்பொருள்:*
# சிலுவையைச் சுமக்க பலப்படுத்துகிறது

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: தவக்காலம் 2ஆம் ஞயிறு (ஆண்டு 3) சனி 16-03-2019 - ஞாயிறு 24-03-2019**
தொ.நூ : 15: 5-12, 17-18, 21 தி.பா: 27 : 1, 7-8, 9, 13-14 பிலிப்: 3: 17-4:1 லூக்கா : 9: 28-36
**" ஆண்டவரே, என் ஒளி, அவரே என் மீட்டப்ர் " - திபா 27**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 16 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித யோஆன்) | **மாலை 7 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 17 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (காடோங்)<br>திருப்பலி (ஆ) (ம.கல்வி படிவம்-1)<br>திருப்பலி (சீ)<br>திருப்பல (தே.மொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்)<br>மரியாளின் சேனை (Acies) ஒன்றுகூடல் 2019 மதியம் 1.00மணிக்கு புனித யோவான் பேராலயம் கோலாலும்பூர் |

**எஸ்.பி.எம்/எஸ்.டி.பி.எம் பரீட்சை முடிவுகளுக்குப் பின் அடுத்தது என்ன? கருத்தரங்கு (த): 1) காலை 8.30-9.30 2) காலை 10.30-12.00 பகல் வரை, விசிடேசன் மண்டபம்**

| | | | | |
|---|---|---|---|---|
| திங்கள் | 18 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 19 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 20 | காலை திருப்பலி நடைபெறாது | | ***குருக்களுக்கான மாதாந்திர தியானம் APC கோலாலும்பூர்*** |
| வியா | 21 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 22 | காலை திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.00 மணி திருச்சிலுவைப் பாதையும் தொடர்ந்து திருப்பலியும் (அனைத்து மொழிகள்)*** |

**தவக்காலம் 3ஆம் ஞாயிறு (ஆண்டு 3)**
வி.ப : 3: 1-8, 13-15 தி.பா: 103 : 1-2, 3-4, 6-7, 8, 11 1 கொரி: 10: 1-6, 10-12 லூக்கா : 13: 1-9
**" ஆண்டவரே, என் ஒளி, அவரே என் மீட்டப்ர் " - திபா 103**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 23 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித கிறிஸ்தோபர்) | **மாலை 7 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 24 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (அப்.பணிக்குழு தமிழ்)<br>திருப்பலி (ஆ) (புனித மரியாள்)<br>திருப்பலி (சீ)<br>மாலை 4.30 தித்தி (சீ.மொ)<br>திருப்பல (தே.மொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**_2019 மார்ச் (பங்குனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்_**

1) பங்கு காணிக்கை:
10/11 மார்ச் 2019: ரிம:10,346.85 தித்தி: ரிம:117.00
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

1) **அருட்திரு கிறிஸ்டோபர் லோ (கார்மேல் சபை) அவர்களை** கார்மேல் குடும்பத்தில் வரவேற்போம். இவர் நெகிரி மாநிலத்தில் உள்ள சீன மொழி பேசும் மக்களும் மேய்ப்புபணி அக்கறைப் பணிகளில் கவனம் செலுத்துவார்.
2) **நம்முடைய உணவு விடுதியில் தூய்மையைக்** கடைப்பிடிப்போம். உணவ் வாங்க வரும்போது வரிசையில் வரவும் . சாப்பிட்டவுடன், தட்டு/குவளை ஆகியவற்றை அதற்குரிய இடத்தில் வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3) **நெகிரி மாநில இளைஞர் பேரணி - (28-30 ஜூன்) NUBE,** போர்ட்டிக்சன்- அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னும் பதிவுகள் நடைபெறும். தொடர்புக்கு: சப்ரீனா -013 -288 7624 - இன்றே பதிந்து கொள்ளுங்கள்

**2019 தவக்கால ஒப்புரவு அருளடையாளம்**

18/3 (திங்) இரவு 8.00 ; குவாடலுப்பே ஆலயம், பூச்சோங்
20/3 (புதன்) மாலை 7.30 : புனித திரேசா, நீலாய்
மாலை 7.30 : புனித பாத்திமா, பிரிக்பீல்ட்ஸ்
21/3 (வியா) மாலை 7.00: இரக்கத்தின் ஆண்டவர், ஷாஆலம்
மாலை:7.30: புனித கிறிஸ்டோபார், கெம்மாஸ்
26/3 (செவ்) மாலை 6.45: புனித அந்தோனியார், கோலாலா
மாலை 7.30: புனிதமரிய வியான்னி, தம்பின்
27/3 (புதன்) இரவு 8.00 : கிறிஸ்து அரசர் , செப்போங் ஜெயா
28/3 (வியா) இரவு 8.00: லூர்து அன்னை, கிள்ளான்
29/3 (வெள்) பகல் 12.30: யோவான் பேராலயம், கோலாலும்பூர்

**மினவுதல் தேவாலய புனிதவின்செண்ட் டி போல் - ஆண்டு கூட்டம்**
நாள்: 24-03-2019 (ஞாயிறு) பகல் 3.00 விவிலிய அறை. அனைவரும் வருக!

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்**
எக்னஸ் பெர்னாண்டஸ் (இறப்பு: 13/3/2019)
முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக

இன்று திருப்பலியை வழி நடத்திய அன்னை வேளாங்கண்ணி (காடோங்) அதிச வினருக்கு நமது நன்றிகள்

- **"நம்முடைய பொது இல்லமான பூமிக்கு அக்கறைக் காட்டுவோம்".** - கிறிஸ்துவை அறிந்து அவரின் பணியாளர்களாகப் பணி செய்வோம்
- **2019 தவக்கால தியானங்கள்: திருமுழுக்கு அளித்து அனுப்புதல்**
  - மார்ச் 23 (சனி) பகல் 2.00 - 9.00 வரை - அருட்திரு போல் ரோபின்சன், மட்டக்களப்பு, இலங்கை (ஆங்கிலம்)
  - மார்ச் 25 (ஞாயிறு) காலை 10.0 - பகல் 4.00 வரை - அருட்திரு போல் ரோபின்சன், மட்டக்களப்பு, இலங்கை (தமிழ்)
  - மார்ச் 23/24 (தேமொழி அதிச வினர் மற்றும் மாணவர்கள்) அருதிரு கிளேரன்ஸ் (ஜோகூர் பாரு) தேமொழி

  பதிவுகள் அனைத்து திருப்பலிகளுக்குப் பின் நடைபெறும். - கட்டணம் இல்லை. அனுமதி இலவசம்- அனைவரும் வருக!
- **_டோமினிக் வேந்தர்கோன் விருது - 2019 - சிறந்த தேர்ச்சி பெற்றவர்களின் கவனத்திற்கு:_**
  அ) படிவம் 3 - 2018 ஆம் ஆண்டுத் தேர்வில் குறைந்தது 6 ஏ பெற்றிருத்தல் வேண்டும்.
  ஆ) படிவம் 5 - ஏ லெவல்- கேம்பிரிட்ஜ் லெவல் - குறைந்தது 6 ஏ பெற்றிருத்தல் வேண்டும்
  இ) படிவம் 5 - ஏ லெவல்-கேம்ப்ரிட்ஜ் இவற்றில் எஸ்.பி.எம் விவிலியப் பாடத்தையும் சேர்த்து 6ஏ பெற்றிருத்தல் வேண்டும்
  படிவங்களை பங்கு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பதிவு இறுதி நாள்: 14-04-2018
- **_சமயங்களுக்கிடையிலான கோல்ஃப் போட்டி -_** நெகிரி செம்பிலான் பணிக்குழுவினர் இதை ஏற்பாடு செய்கின்றனர். நாள்:06-04-2019 காலை 7.00 மணி - சிரம்பான் இண்டர்னேஷனல் கோல்ஃப் கிளப் ((SIGC). நபர் ஒருவருக்கு கட்டணம் ரிம்250/- ( காலை உணவு, பகல் உணவு, பரிசுப் பை உள்ளடக்கியது) மற்றும் கண்கவர் பரிசுகள். கோல்ஃப் விளையாடும் அனைவரையும் இதில் கலந்து ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம். தொடர்புக்கு: தயாளன் - (017- 8809454) கிறிஸ்டோபர் கே. (019-6216 194)
- **_கேளிக்கை சந்தை:_** 23/24 மார்ச் மற்றும் 30/32 மார்ச் சனிக்கிழமை மாலை 5.00- 8.00 வரை ஞாயிறு காலை 8.00 - பகல் 3.00
  **பொருட்களை ஒப்படைக்க: இறுதி நாள்: 16-03-2018 - சனிக்கிழமை காலை 10.00 - 12.00 வரை ஞாயிறு காலை 8-11 வரை**
  இடம்: ஆலய உணவு விடுதிக்கு முன்புறம்: - புதிய / பழைய வீட்டு அலங்காரப்பொருட்கள்/உபயோகப் பொருட்கள் விற்பதற்கு நல்ல நிலையில் உள்ள பொருட்கள். கண்டிப்பாக - உடைகள் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- **_தூதுரைப் பணி ஆண்டு_**- 'டி' சட்டை விற்பனை: விலை ரிம:15.00 மட்டுமே
  இரண்டு நிறங்கள்: மெரூண் & வெள்ளை - அளவுகள்: XS / S / M / L / XL / 2XL / 3XL
  தொடர்புக்கு: டோரீன்: (017- 3326007)
- பங்கு மனிதவள மேம்பாட்டுப் பணிக்குழுவினரி ஏற்பாட்டில் இரத்த தான முகாம்: 07-04-2019 - காலை 7.30 - பகல் 3.00 வரை இடம்: மினவுதல் தேவாலய மண்டபம்-
  **" உயிரைக் காப்போராய் இருங்கள் - வாழ்வின் கொடையைக் கொடுங்கள் - இரத்த தானம் செய்யுங்கள்"**

- **_ஆண்டவரின் பிறப்பின் அறிவிப்பு நாள்:_** திங்கள் (25-05-2019) மாலை 6.00 : செபமாலை தொடர்ந்து அன்னை மரியாளும் நற்கருணையும் என்ற தலைப்பில் ஆன்மீக உரை; ஆவியின் அருங்கொடை செபம் மற்றும் குணமளித்தல் - இடம்: ஆலயம். - அனைவரும் வருக! வாய்ப்பை தவற விடாதீர்கள் ( ஆங்கிலம்)
- **_அதிச ஒருங்கிணைப்புகுழு கூட்டம்_** - 27-03-2019 இரவு 8.00 மணி: இடம்:மினவுதல் தேவாலய மண்டபம்
- **_தவக்கால ஒப்புரவு அருளடையாளம்:_** நாள்: 01-04-2019 (திங்கள்) மாலை 6.00 மணி - திருப்பலி - தொடர்ந்து ஒப்புரவுஅருளடையாளம் (மினவுதல் மாதா தேவாலயம்)